உ

சிவமயம்



திருப்பாசுரம்

(பொழிப்புரையுடன்)

1946.

திருப்பாசுரம்

(பொழிப்புரையுடன்)

உரையாசிரியர்:
திரு. சு. வச்சிரவேல் முதலியார்,
பி.ஏ., எல்.டி.,

திருநெறிவிளக்க வெளியீடு—கூ

பொன். சண்முக முதலியார் மகவு

திருவளர் **பார்வதி**

மூன்றாந் திங்கள் வழிபாட்டின் அங்கமாக
வெளியிடப்பட்டது.

40/4

உ
சிவமயம்

பதிப்புரை

திருவேகம்பநாதன் திருவருளால் அடியேன் பெற்ற மகவு பார்வதியை மூன்றாந் திங்களில் அப்பெருமானைத் தரிசிப்பிக்கப் பெரியோர்கள் முடித்தபடி விய, கார்த்திகை, 10, (25–11–'46) திங்கட்கிழமை மாலை 6-மணிக்குத் திருவேகம்ப நாதர் திருக்கோயிலில் இயற்றும் வழிபாட்டின் அங்கமாகத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த 'திருப்பாசுரம்' என்னும் திருப்பதிகத்தினை அச்சிட்டுப் பொருள் விரித்துத் தக்கார்களுக்கு வழங்கும் கருத்துடன் இவ்வெளியீடு செய்யப்படுகிறது.

இத்திருப்பதிகம் சைவ நன்மக்கள் முதல்வன் திருவருளால் பெற்றுள்ள திருவருள் ஞானப்பாக்களுள் தலையாய ஒத்தாகலின் இதனை உரையுடன் அச்சிடுதல் நன்மைபயக்கும் என உன்னி அதனை இயற்றித் தருமாறு எனது ஆசிரியர் உயர்திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அவர்களை வேண்டினேன். வேண்டிய அளவிலேயே அவர்கள் அத் திருப்பதிகத்திற்குத் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த பாவடிவின் விரிவுரையை அடியொற்றி மரபுநிலை விளக்கும் மாண்பினையுடைய முன்னுரையும் பொழிப்புரையும் உரைக்க யான் எழுதிக்கொண்ட அவற்றை

அவ்வண்ணமே இப்பதிப்பின்கண் அச்சிட்டு வெளியிட லாயினேன். தமது பல அலுவற் செறிவிடையே என் வேண்டு கோளை யேற்று இம்மூன்னுரை பொழிப்புரைகளை உரைத் துதவிய அவர்கட்கு எனது பணிவும் நன்றியறிவுமுடைய வணக்கம் உரித்தாகின்றது.

இத்தகைய அருள்ஞானதானத்தை ஒல்லும் வகை வாய்ப்பு நேரும்போதெல்லாம் செய்தல் வேண்டுமென்னும் என் அவாவினை, முன்குறிப்பின்றி மூன்று நாள் எல்லைக்குள் உண்ணின்று ஊக்கி இவ்வெளியீட்டை முற்றுவிக்கும் வகை யின் ஒருவகையான் கிரப்பிய அம்மை அப்பர் திருவருளை வழுத்துகின்றேன்.

இத்திருப்பதிகம் மெய்ந்நெறி உணர்ந்து உய்யக் கருது வார் யாவருக்கும் உயிரினுஞ் சிறந்ததாய்ப் பொருளுணர்ந்து நாடொறும் ஓதி உணர்தற்குரிய திருவருள் ஞானோபதேச மாகலின் தக்கோர் பலரும் பெற்றுப் பயன் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

மெய்கண்டார் நிலையம்,
காஞ்சிபுரம்.
மெய்-724, கார்த்-7.

இங்ஙனம்,
பொன். சண்முக முதலியார்.

முன்னுரை

திருப்பாசுரம் என்னும் திருப்பதிகம் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்துள்ள திருப்பதிகங்கள் பலவற்றுள்ளும் தலையாக வைத்து ஓதி உணர்தற்பாலது.

அது, பாண்டி நாட்டில் பாண்டி மன்னன் முன்னர் நாயனாருக்கும் அமணர்களுக்கும் நிகழ்ந்த வாதத்தில், மூன்றாம் முறையாக உண்மை துணிதற்பொருட்டு, வைகையாற்றில் எதிரூர்ந்து செல்லுமாறு திருவுளங்கொண்டு, நாயனார் திருக்கைம் மலரால் எட்டின்கண் தீட்டப் பெற்றதாகும். வேதம் முதலிய அறநூல்கள் உலகியல் பற்றியன என்பதும், உயிர்களுக்குப் பேராவியற்கைப் பேரின்ப நிலையினைப் பயக்கும் மெய்ந்நெறியாவது தொன்றுதொட்டு, இறைவன் அருள் வழி நிற்கும் அடிப்பட்ட சான்றோர் பலரும் அறிவுறுத்திவரும் சிவநெறியே என்பதும், உண்மை உணரும் பான்மையனாய பாண்டி மன்னன் உணருமாற்றான் அருளிச்செய்யப்பெற்றது. இதன்கண் சிவநெறியின் அடிப்படை உண்மைகள் யாவும் உள்ளன. இதன்பொருளைத் திரிபின்றி உணர்ந்து யாவரும் ஓதி உய்வான் திருவுளம்பற்றி, அருண்மொழித் தேவராகிய சேக்கிழார்பெருமானால், இத்திருப்பதிகவரலாறு கூறுமிடத்து, அரியதோருரை பாவடிவில் விரித்தருளப்பட்டது.

இத்திருப்பதிகத்துள், முதல் திருப்பாட்டு வாழ்த்துக்கூறு முகத்தான் 'உலகியல் மெய்ந்நெறி' யென்னும் இரண்டனை யும் பிரித்துணர்த்தல்; இரண்டாந் திருப்பாட்டு 'முதல்வனை எவ்வாறுமாறு' உணர்த்துதல்; மூன்றாந் திருப்பாட்டு 'அவன் சிறப்பியல்பு' உணர்த்துதல்; நான்காந் திருப்பாட்டு அவன் உயிர்களுக்கு அருளுமாறு உணர்த்துதல்; ஐந்தாந் திருப்பாட்டு 'அவன் அளவைகளான் அளந்தறிதற்கரியன்' என்பதுணர்த்து தல்; ஆறாந்திருப்பாட்டு அவன்செயல்கள் அவன்றன்கருணைத் திறத்தாலாவன' என்பதுணர்த்துதல்; ஏழாந் திருப்பாட்டு 'முதல்வன் வழிபாட்டிற்கு இடையூறு இயற்றல் தீர்வில் குற்றமாகலின்' அதுசெய்தாரை ஒறுத்தல் இறைபணியாம் என்பதுணர்த்துதல்; எட்டாந் திருப்பாட்டு புராணங்கள் யாவும் சிவபிரான் தொன்மையினையே எடுத்துரைக்குமென்ப துணர்த்துதல்; ஒன்பதாந் திருப்பாட்டு 'காரணக் கடவுளர் யாவரும் முதல்வன் அருள்வலியானே தத்தம் தொழிலை யியற்றுவர்' என்பதுணர்த்துதல். பத்தாந் திருப்பாட்டு 'திரு நீலகண்டத்தின் பெருமை' கூறுதல்; பதினொன்றாந் திருப் பாட்டு 'தாம் இடும் ஏடுதானும் முதல்வன் திருவருளுண்மை யைத் தெளிவிக்கும்' என்பதுணர்த்துதல்; பன்னிரண்டாந் திருப்பாட்டு திருப்பதிகம் ஓதியுணர்தலின் பயன் கூறுதல்.

இதனை அருணந்திசிவாசாரிய சுவாமிகள் 'பாண்டியன் கேட்பக் கிளக்கு மெய்ஞ்ஞானம்' எனக்குறித்தலின், இது ஞானோபதேச வடிவாக உள்ளது என்பது தெளியப்படும். 'பாசாம் சொன்ன பத்தும்' என நாயனார் தாமே குறித்தருளு

தலும் அதுபற்றிப் 'பாசுரம் பாடலுற்றார்' எனச் சேக்கிழார் நாயனாரும் அருளிச் செய்தவாற்றானும் இத்திருப்பதிகம் திருப்பாசுரம் என வழங்கப்படும்.

இதனை எனது ஆருயிர் நண்பர் திரு. பொன். சண்முகனார் அவர்கள் தமது அருந்தவ மகவு பார்வதியை மூன்றாந் திங்களில் திருவேகம்பப்பெருமானைத் தரிசிப்பிக்கும் காலத்து அச்சிட்டு வழங்குதற் பொருட்டு அதற்கு உரையும் பொருந்தியிருத்தல் நலன் பயக்கும் எனக்கருதி என்னை வேண்டினாராகலின் திருப்பதிகத்தின் பொருளை மரபுமாத்திரையான் விளக்க எண்ணிச்சேக்கிழார்பெருமான் திருவடி உணர்த்தியவாற்றான் ஒருசிறிது அடியேனால் உரைக்கப்பட்டது. குற்றம் நீக்கிக் குறைபெய்து கோடல் அறிஞர்கடன். அம்மை தழுவக் குழைந்த திருவேகம்பநாதன் திருவருளால் மகவு நோயின்றி வளர்ந்து நீடுவாழ்ந்து தாய் தந்தையரைப் போலத் தமிழ் நாட்டிற்கு மெய்யுணர்வைப் பரப்புக.

ஞானசம்பந்தன் திருவடி வாழ்க.

திருவருளகம்,
காஞ்சிபுரம்.
மெய்-724, கார்த்-6.

இங்ஙனம்,
க. வச்சிரவேல் முதலியார் B.A., L.T.,

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வாழ்த்து வகை

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

உலகம் நலமுறுதற் பொருட்டுத் தொன்று தொட்டு வரும் இறைவன் வழிபாட்டைச் செய்வோராகிய முனிவர்களும், இறைவன் ஆணைவழி நின்று இவ்வுலகத்தவர் செய்யும் வழிபாட்டினை ஏற்றுப்பயன் தரும் தேவர்களும், இறைவன் வழிபாட்டிற்குரிய சிறந்த பொருள்களைத்தரும் ஆனினங்களும் வாழ்க. இறை வழிபாட்டின் பயனாகவும், அங்கமாகவும்உள்ள மழை காலந்தவறாது பெய்க. மக்களை மெய்ந் நெறிக்கண் நிறுத்தும் அரசன் செங்கோல் வாழ்க. கடவுள் நெறிக்கு மாறான கருத்துக் கள் மேம்படாதொழிக. எல்லா உயிர்களும் திருவைந்தெழுத்தை எண்ணித் துயர் நீங்கி இன்புறுக.

திருவுருவம்

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய ரேறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே.

முதல்வன் அன்பான் உருகி உள்ளுணர் வார்க்கன்றித் தன் முனைப்பால் காணலுறு வார்க்குக் காணப்படான்; அன்பினுல் அவனை நினைந்தும், தொழுதும் வழிபடுவார்க்கு அருள் புரிய அவன்தானே மேற்கொண்டுள்ள இயற்கை அருளுருவத்தின் கண்ணுள்ள அடை யாளங்கள் அங்கை அனலும் அறவடிவாகிய ஆனேற்றூர்தியும், கறைமிடறும், முதலியன. இங்ஙனம், அன்பர்கள் தன்னை நினைக்கவும், வாழ்த்தவும், வணங்கவும் அருட்டிருமேனி உடையனுயினும் முதல்வன் இயங்குதிணையும், நிலைத்திணையும் ஆய உலகமே உருவாக உடைய பெரியோன் ஆவன். அவன் பெருந் தன்மை யாவர் உணர்வானும் சென்று எட் டொணுதது.

தன்னியல்பு

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரோடு தாயிலர் தம்மையே
சிந்தி யாயெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ.

முதல்வன், உலகம் யாவையும் தனது அருள் ஒளியாற் பிரிந்து உருச்சிதைந்து நிற்கும் ஆற்றல் உருவ அருநிலையாகிய திருநீற்றினைச் சந்தனமாகக்கொண்டு அணிகின்றான். எல்லாப் பொருள்களையும் அமைத்து அவை ஒடுங்கும்போது ஒடுக்கி மீளத் தானே அவற்றைத் தோற்றுவிக்கின்றானாகலின் எமது தலைவனாகிய சிவபிரான் பிறப்பில்லாதவன். உண்மை அறிவாய் விளங்கும் மெய்ப்பொருள் தான் ஒருவனே என இப்பிறப்பின் கண்ணே உணர்வார்க்கு அவர்தம் இருள்சேர் இருவினையும் தீர்த்தருளுவன். கட்டு வீடு என்னும் நிலைகளை உடைய பொருள்களில் ஒன்றல்லனாய் முதலும் ஈறும் இன்றி நிற்கும் அம் முதல்வனை எப்பொருட் கூற்றின்வைத் துரைப்பது? உரைத்தல் அரிது.

அருள் செய்யும் முறைமை

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும்
கேட்பான் புகிலளை வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்.

முதல்வன் ஆட்கொள்ளத் தக்கார்க்கு அருளும் வகையும், அவன் மாண்பும், எடுத்துச் சொல்லப்புகுங்கால் அளவுபடாத இயல்புடையன. ஆகலின் அவற்றைப்பற்றி ஆராய்ச்சி வேண்டுவதின்று. தக்கோர் இறைவன் அருள் வழி நின்று இங்குக் கூறுமவற்றைப் பொருளாக் கொண்டொழுகின் கோள்களான் வரும் இன்னல்களும், தொன்று தொட்டு வரும் வினைகளும் நீங்கப்பெறுவர்.

உணரும் முறைமை

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கி ரிறையே வந்து சார்மின்களே.

உயிர்களுக்கு இன்பத்தைச் செய்யும் முதல்வனுக்கு ஒப்பாகப் பிறிதொரு பொருளின்மையின் அவன்றன் தன்மையை ஏது எடுத்துக்காட்டு என்பவற்றின் வைத்து அளந்துரைத்தல் சால்பன்று. உள்ளம்உருகி உணர்வார்க்கு உள்ளெழும் சோதியாய் நிற்கும் முதல்வன் புறத்தே அங்கியைத் தனக்குச் சிறந்த உருவாக உடையன். உளங்கொண்டு முதல்வனைக் காணலுறுவார்க்கு இதுவே உண்மைப் பொருளாம். இறைவனைப் புறத்தும், அகத்தும் வழிபட்டு அருளாசிரியன் காட்டிய குறியின் வைத்துணர்ந்து அன்பால் இன்பமார்ந்து வாழ்வோர் எல்லாத்துன்பங்களுக்கும் காரணமாகிய பிறப்பின் நீங்கி உய்வர். நன்னெறிக்கண் நிற்பீர், இறைவனையே சார்மின்கள். வேண்டும் பொருளெல்லாம் அவன் திருவடி அன்பால் பெறலாகும்.

தன்செயற் கருத்து

ஆடும் மெனவும் மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடு மெனவும் புகழல்லது பாவ நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் மெனக் கேட்டிராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே.

இறைவன் திருநடனம் செய்வதும், வெலற்கரிய கூற்றுவனை உதைத்ததும், உலகிற்கு முதல் நூல்களை அருளுவதும், ஆராய்ந்து பார்க்கின், உயிர்கண்மாட்டு வைத்த பெருங் கருணையின் விளைவேயாகும்.

திருத்தொண்டின் சிறப்பு

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்தவண்ணம் அறிவார் சொலக் கேட்டு மன்றே.

தாம் நல்ல மலர்களைக் கைக்கொண்டு, நல்லபடி கிடைத்த பாலையும் கொண்டு இறைவனை வழிபட, அவ்வழிபாட்டைப் பொருட்படுத்தாது இடையூறு விளைத்த தமது தந்தையினது, தாம் முன்னர் வணங்கிய கால்களைத் துணிபட எறிந்தவாற்றான் வீடு பேறெய்திய சண்டேசநாயனாரது உண்மை வரலாற்றினைத் தக்கோர்பலரும் எடுத்து அறிவுறுத்தி வருதலை யாம் கேட்டுள்ளோம். அதனால் சிவ வழிபாட்டிற்கு இடையூறு விளைத்தல் தீதென்பதும், இடையூறு விளைப்போரை ஒறுத்தல் கடவுள் நல்லறமாம் என்பதும் துணியப்படும்.

புராணவுண்மை

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூத னொலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே.

சூத முனிவரான் அருளப்பெற்ற பதினெண் புராணங்களும், உயிர்கள் சிவபிரானையே முதல்வன் எனத்தெரிந்து உய்தற்பொருட்டு அவன்றன் முதன்மையினையே முதன்மையாகக்கொண்டு நிற்கின்றன.

கடவுளர் நிலை

பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண் டவர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே.

காத்தற் கடவுளாய திருமாலும் இறைவன் ஆணைவழி நின்று அவன் அருள் வலிபற்றியே உலகினைக்காக்கின்றான் என்பது, அவன் இவ்வுலகின் வந்து, இறைவன் அருட்குறி நிறுவி வழிபட்டுச் சக்கரம் அருளப்பெற்றான்என்னும்

வரலாற்ருன் உணரப்படும். இங்ஙனம் முதல்வன் அருள்நினைவால் உந்தப்பட்டே ஏனைக் காரணக் கடவுளரும் தத்தம் தொழில்களைக் கரணங்களால் இயற்றுவர் என உணர்தல் வேண்டும்.

சிவன் பெருந்தன்மை

மாலா யவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர்பக ரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே.

திருமால், நான்முகன் முதலிய தேவர் யாவர்க்கும் தாங்குதற்கரிதாய் எழுந்த ஆலால நஞ்சை இறைவன் உண்டமை அவன் கருணைத் திறத்தையும், தன்வய முடைமையினையும் விளக்கும்.

திருவருளுண்மை

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினனும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும் பண்பு நோக்கில்
பெற்றேன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே.

இவைதாம் அன்றி, மதுரைமாநகர்க்கண் சங்கம் அமைத்த பாண்டி மன்னர்க்கு தெளியவும், அங்ஙனம் தெளியமாட்டாத சிறுமையினை உடைய அமணர்களுக்கு எளிதாக இடப்படும் இப்பாசுரம் தீட்டிய ஏடு, நீரைப் பற்றி அதன் வழிப்படராது, எதிர் ஊர்ந்து செல்லும் பண்பினைக் கண்கூடாகக் காணலுறின், ஆனேறுயர்த்த அரன்பால் அன்பு செய்வதே மெய்யுணர்வின் பயன் என்பது தெளியப்படும்.

திருக்கடைக்காப்பு

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன் நல்ல
எல்லார் களும்பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே.

நல்லவர்கள் வாழும் சீகாழி நகரில் தோன்றிய ஞானசம்பந்தன் யாவரானும் பரவப்படும் ஈசனை ஏத்து பாடலாக, பல்லோருஞ்சிந்தித்து உணர்தற்பொருட்டு, மொழிந்த பாசுரமாகிய இப்பதிகம் வல்லவர்கள் மேலுலகைத் தலைவராய் ஆளவும் வல்லர் ஆவர்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ நிலயம் பிரஸ், காஞ்சி. Q.H.Ct. 38/1 402·1000.